முறைகள் வகுக்கப்படுகின்றன. அதையொட்டித்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொது ஏலம் என்று சொல்லி விற்கும் போது இதிலே குறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி ஏன் இதிலே டெண்டர் கொடுக்கக் கூடாது என்பார்கள். டெண்டர் கேட்டு விலை குறைந்து விட்டால் ஏன் பொது ஏலம் வைக்கக் கூடாது என்பார்கள். ஏதாவது ஒரு முறையைத்தான் அரசாங்கம் நடைமுறையாக வைத்துக் கொள்ள முடியும். அரசுத் துறையாக இருந்தாலும் அரசாங்கத்தின் விதி முறைகளைத்தான் கடை பிடிக்க வேண்டும். கார்ப்பரேஷனாக இருந்தாலும் அரசு விதிக்கின்ற விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். ஆகவே, நடைமுறையில் மாறுதல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அரசாங்கம் இப்படி பொது ஏலத்தில் விற்கக் கூடிய விலைக்கும் தனியார் விலைக்கும் அதிக வேறுபாடுகள் இருக்குமானால் அது பற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பீடி இலை மரங்கள் உற்பத்தி

*வினா எண் 266—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பீடி இலை மரங்கள் தமிழகத்தில் எந்தெந்த பகுதிகளில் இருக்கிறது ?

(ஆ) பீடி இலை மரங்களை மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் பெருக்குகிற திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முண்டந்துறை குன்றுகள் மற்றும் ஆந்திரா எல்லை ஓரமாக செங்கல்பட்டு மாவட்டத்திலும் அங்குமிங்குமாக பீடி இலை மரங்கள் சில காணப்படுகின்றன.

(ஆ) இல்லை.

திரு. தி. அன்பழகன் : தமிழகத்தில் பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய அளவுக்கு குடிசைத் தொழிலாக அமைந்திருப்பது பீடித் தொழில். இதற்கு அடிப்படைத் தேவை பீடி இலைகள். இந்தத் தொழில் நசித்து விடாமல் இருக்கும் அளவுக்கும் ஊக்கப்படுத்தும் அளவுக்கும் தமிழகத்தில் மலைப் பகுதிகளில் அந்த மரங்களை சிறப்பாக அமைத்து செயல்படுத்த அரசு முன் வருமா ?

[1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1968ஆம் ஆண்டு முதல் 1974ஆம் ஆண்டுவரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்த பீடி இலையைப் பயிர் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அது பலன் தராத நிலையில் மேலும் முயற்சிகளில் ஈடுபடாமல் வனத் துறை அதை விட்டு விட்டிருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தமிழ் நாட்டில் எட்டு லட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கக் கூடிய பீடித் தொழிலுக்குத் தேவையான இலைகள் மத்தியப் பிரதேசத்திலிருந்தும் ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் காடுகளில் இப்படிப்பட்ட இலை மரங்களை வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகளை ஆராய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதை இப்போது தான் சொன்னேன். 1968 முதல் 1974வரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பலன் அளிக்கவில்லை. மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டிருக்கிற காரணத்தால் மீண்டும் முயற்சி செய்ய முடியுமா என்பதைப் பற்றி வனத் துறைக்கு ஆலோசனை கூறலாம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தமிழகத்தில் மூன்று லட்சம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இலை போதிய அளவுக்குக் கிடைக்காததன் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் பீடித் தொழிலை மூடக்கூடிய நெருக்கடி வந்திருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் மீண்டும் முயற்சிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மூன்று லட்சம் பேருக்கு வேலைக்கான உத்தரவாதம் இல்லை.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி அல்ல.

திரு. க. இரா. சின்னராசு : பீடி மரம் வளர்ப்பது, தமிழகத்திலே சரியான படி பலனளிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளிலே வளருகின்ற அந்த மரம் நம்முடைய தமிழ் நாட்டிலே வளருவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லப்பட்டாலும் மண்வள ஆராய்ச்சியை மேற்கொண்டு எந்த எந்த இடங்களிலே வைத்தால் வளரும் என்று கண்டு பிடித்து அதை வளர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே நாகர்கோவில் பகுதி, தர்மபுரி மாவட்டத்திலே டெங்கனிக் கோட்டை பகுதி, வட ஆற்காடு மாவட்டத்திலே ஜம்னாமருதூர் பகுதி போன்ற பல்வேறு பகுதிகளிலே மரங்கள் பயிரிடப்பட்டு வளர்ச்சியைக் கணக்

கிட்டுப் பார்த்திருக்கிறார்கள். இந்த மண்ணில் இந்தச் சூழ்நிலையில் நல்ல வளர்ச்சியில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். எல்லா மரங்களும் எல்லா இடங்களிலும், எல்லா சீதோஷ்ணங்களிலும் வந்து விடும் என்று சொல்ல முடியாது. அந்த அந்த இடங்களிலே அந்த அந்த சூழ்நிலைகளுக்கேற்ப வளருகின்றன, வளராமல் போகின்றன. மேலும் நாம் மேற்கொண்டு இருக்கின்ற காடு வளர்ப்புப் பணியிலே புதிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு பயிரிட முடியுமா என்பதைக் கண்டறியும்படி நாம் வனத் துறைக்கு ஆலோசனை வழங்கலாம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே தேவைப்படுகின்ற பீடிகள் எவ்வளவு? தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு எவ்வளவு? வெளி மாநிலங்களிலிருந்து எவ்வளவு பெறுகிறோம் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்தை அறிவிக்க வேண்டிய பொறுப்பிலே உள்ள அமைச்சர் அவர்களிடத்திலேயே கேள்வி கேட்டால் தக்க பதில் கிடைக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம்

*வினா எண் 267 : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு எண்ணியுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலே ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதாக நான் ஒரு குறிப்பிலே பார்த்தேன். அங்கே தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா? குறுகிய காலத்திலே தேங்காய் உற்பத்தியாகும் ஜாதி தென்னை மரங்கள், நெட்டை, குட்டை, வீரிய, ஒட்டு தென்னைக் கன்றுகளை தஞ்சை மாவட்டத்திலேயும், மற்ற வேறு இடங்களிலேயும் வளர்க்கின்ற முறையிலே மண்வளத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டால் ஆங்காங்கே கயிறை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் சிறு தொழில்கள் அதிகமாக வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதால் அப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?